# මැතිවරණ කොමිෂන් සභාව
# தேர்தல் ஆணைக்குழு

පොදු කාර්යාලය : 011-2868441, 2868442, 2868443
பொது அலுவலகம்
ෆැක්ස්/தொலைநகல : 011-2868426

*web : www.elections.gov.lk e-mail : info@elections.gov.lk*

මැතිවරණ කොමිෂන් සභා කාර්යාලය
සරණ මාවත,රාජගිරිය (10107)
தேர்தல்கள் ஆணைக்குழு அலுவலகம்
சரண மாவத்தை, இராஜகிரிய (10107)


| මගේ අංකය : எனது இல EC/PE/2020/09 | ඔබේ අංකය : உமது இல. | දිනය : திகதி : 2020.03.03 |
|---|---|---|

*மிக அவசரம்/மிக முக்கியம்*

**அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்/ மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்/ மாகாண சபை அமைச்சுக்களின் செயலாளர்கள்/ ஆளுநர்களின் செயலாளர்கள்/ திணைக்களத் தலைவர்கள்/ ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்/ அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள்,**

## பாராளுமன்றத் தேர்தல் - 2020.04.25
## அஞ்சல் மூலம் வாக்களித்தல்

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலுக்கு 1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டதத்தின் 26 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான வசதிகளைக் கோருவதற்கு உரித்துடைய வாக்காளர்களுக்கு அதாவது, தேர்தலுக்குரிய கடமைகளில் ஈடுபடுதல் அல்லது கட்டாயமாக முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டிய வேறு அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுவதன் காரணமாக தனக்கு ஒதுக்கப்பட்ட்ட வாக்கெடுப்பு நிலையத்திற்கு நேரில் சென்று வாக்களிப்பதற்கு முடியாத நிலை ஏற்படுவதற்கு வாய்ப்புள்ள வாக்காளர்களுக்கு அஞ்சல் மூலம் வாக்களிப்டதற்கான வசதிகள் செய்துகொடுக்கப்படல் வேண்டும்.

02. அது தொடர்பாக தாபனத் தலைவர்களுக்கு வெளியிடப்பட்டுள்ள ஓர் அறிவுறுத்தல் கோவை இத்துடன் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. தங்கள் நிறுவனத்தின் அலுவலர்களின்/ஊழியர்களின் அஞ்சல் மூல வாக்கு விண்ணப்பங்கள் தொடர்பான அலுவலகளை ஒருங்கிணைப்புச்செய்வதற்கு அலுவலரொருவரைப் பெயர்குறித்து, அவர் மூலம் நிறுவனத்தின் அனைத்து அலுவலர்களையும் அறிவுறுத்தி, உரிய திகதிக்கு முன்னர் அத்தாட்சிப்படுத்திய அஞ்சல் மூல வாக்கு விண்ணப்பங்களை உரிய மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அனுப்பிவைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பது சிறந்தது. **தேர்தல் கடமைகளிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தாலொழிய, அரசாங்க சேவையிலும் மாகாண அரசாங்க சேவையிலுமுள்ள ஏனைய அனைத்து அலுவலர்களும் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பிக்க வேண்டுமென்பதுடன், அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பிக்காமையும் குறைபாடுகளுடன்கூடியதாக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டிருத்தலும் தேர்தல் கடமைகளிலிருந்து விடுவிக்கப்படுவதற்குரிய ஒரு காரணமாக அமையாது.**

03. பாராளுமன்றத்தைக் கலைத்தல் பற்றிய பிரகடனம் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட திகதிக்கு ஒரு வாரத்திற்குப் பிந்திய, இரண்டு வாரங்களுக்கு முந்திய காலப்பகுதியினுள் அஞ்சல் மூல வாக்கு விண்ணப்பங்கள் உரிய தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு கிடைக்கப்பெறுதல் வேண்டும். அதற்கமைய, விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் காலம் 2020.03.06 ஆம் திகதி ஆரம்பித்து 2020.03.16 ஆம் திகதி முடிவடையும்.

அதற்கமைய, தங்கள் நிறுவனத்தில் பணிபுரியும் அத்துடன் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்காக விண்ணப்பிப்பதற்குத் தகுதி பெற்றுள்ள அனைவரது விண்ணப்பங்களும் 2020.03.16 ஆம் திகதி

அல்லது அத்திகதிக்கு முன்னர் உரிய மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருக்குக் கிடைக்கப் பெற்றிருத்தல் வேண்டும். அத்திகதிக்கு பின்னர் அஞ்சல் மூலமோ, வேறு வகையிலோ கிடைக்கப் பெறுகின்ற அனைத்து விண்ணப்பங்களையும் நிராகரிக்க நேரிடும். ஆதலால், அஞ்சல் வாக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதித் தினத்தில் அத்தாட்சிப்படுத்தப்படும் அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை அஞ்சல் இடுவதன் மூலம், உரிய திகதிக்கு முன்னர் தெரிவத்தாட்சி அலுவலருக்குக் கிடைக்கப்பெறுதல் தொடர்பில் பிரச்சினைகள் ஏற்படலாம். ஆதலால், இறுதி இரண்டு நாட்களுக்குள் அத்தாட்சிப்படுத்தப்படுகின்ற விண்ணப்பங்களை தமது அலுவலகம் அமைந்துள்ள மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்திற்கு நேரில் சென்று ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கவும். அவ்வாறு மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களில் ஒப்படைக்கப்படும் விண்ணப்பங்களை விண்ணப்பகாரர்களின் பதிவு மாவட்டங்களின் அடிப்படையில் வேறு பிரித்து ஒப்படைப்பதன் மூலம் இப்பணியை மேலும் எளிதாக்கிக்கொள்ள முடியும்.

04. அஞ்சல் மூல வாக்காளர்களின் வசதி கருதி தேர்தலுக்குச் செல்லுபடியாகும் தேருநர் இடாப்புக்களை 2020.03.06 ஆம் திகதியிலிருந்து பின்வரும் இடங்களில் வெளிக்காட்டி வைத்திருப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது:-

- அனைத்து மாவட்ட செயலகங்களிலும் (கச்சேரிகளில்)
- அனைத்து மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களிலும்
- அனைத்து பிரதேச செயலகங்களிலும்
- அனைத்து கிராம அலுவலர் அலுவலகங்களிலும்

} குறித்த அதிகார இடப்பரப்புக்கு உரிய தேருநர் இடாப்பு

05. மேலே குறிப்பிடப்பட்ட வெளிக்காட்டி வைத்திருக்கப்படும் இடங்களுள் மாவட்ட செயலகங்களில் அம்மாவட்டத்திற்கு உரியதாகவும், பிரதேச செயலகங்களிலும் கிராம அலுவலர் அலுவலகங்களிலும் அவ்வதிகார இடப்பரப்புக்கு உரியதாகவும் புத்தகங்களாகத் தயாரிக்கப்பட்ட தேருநர் இடாப்புக்களின் பிரதிகள் வெளிக்காட்டி வைக்கப்பட்டுள்ளன.

06. மேலே குறிப்பிடப்பட்ட இடங்களுக்கு மேலதிகமாக -

- பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, சுதந்திர சதுக்கம், கொழும்பு 07.
- தொழில் திணைக்களம், தொழில் செயலகம், நாரஹேன்பிட்ட, கொழும்பு 05.
- கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்லை.
- பதிவாளர் நாயகம் திணைக்களம், 243/3/A, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை.
- அஞ்சல் தலைமையகம், டி.ஆர் விஜேயவர்தன மாவத்தை, கொழும்பு 10.
- கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சு, மாளிகாவத்தை.
- செத்சிறிபாய - கட்டம் I அலுவலகக் கட்டிடத்தொகுதி, பத்தரமுல்லை ஆகிய கொழும்பு மாவட்டத்தின் அரசாங்க அலுவலகக் கட்டிடத் தொகுதிகளில் தேருநர் இடாப்புக்களின் தகவல்களை கணினியின் துணையுடன் விண்ணப்பகாரர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

07. ஆதலால், அனைத்து அஞ்சல்மூல வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கும் நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் உரிய தேருநர் இடாப்புக்களின் விபரங்களை தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தினூடாக தகவல் தொழில்நுட்ப சேவையை (e-service) பயன்படுத்துவதன் மூலம் விண்ணப்பகாரர்களுக்கு தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

அஞ்சல் வாக்காளர்களுக்கு தமது பதிவுக்குரிய தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு 2019 தேருநர் இடாப்பின் தகவல் தொழில்நுட்ப சேவையை (e-service) நாட்டின் அனைத்து அஞ்சல் வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கும் வழங்க ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதுடன், அதற்கு அனைத்து அஞ்சல் வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களினாலும் தமது அலுவலகத்திற்குரிய நிருவாக மாவட்டத்தின் பிரதி/உதவி தேர்தல்கள் ஆணையாளர்களுக்கும் இத்துடன்

இணைக்கப்பட்டுள்ள 01 ஆம் படிவத்தைச் சமர்ப்பிப்பதன் மூலம் அஞ்சல் வாக்காளர்களுக்கு தேவைப்படும் தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் e-service வசதியைப் பெற்றுக்கொள்ள முடியும். தேர்தல் ஆணைக்குழுவினால் அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் இறுதித் திகதி வரை மட்டுமே மேற்படி e-service வசதிகள் வழங்கப்படும். ஆதலால், அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ள ஆரம்பிக்க முன்னர் உரிய விதத்தில் விண்ணப்பங்களை மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தில் சமர்ப்பித்து, மேற்படி e-service வசதியை பெற்றுக்கொள்ளுமாறு அனைத்து தாபனத் தலைவர்களும் வேண்டப்படுகின்றனர்.

மேற்கூறிய வெளிக்காட்டி வைத்திருக்கப்படும் இடங்களினும் தமது தொழில் இடங்களிலும் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கு சென்று விண்ணப்பகாரர் வதியும் மாவட்டத்தையும் அடையாள அட்டை இலக்கத்தையும் சமர்ப்பித்த பின் அஞ்சல் மூல வாக்கு விண்ணப்பங்களைப் பூரணப்படுத்துவதற்கு உரிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். தேசிய அடையாள அட்டை இலக்கம் தேருநர் இடாப்பில் குறிப்பிடப்படாத விண்ணப்பகாரர்களுக்கு, தேருநர் இடாப்புக்கள் புத்தகங்களாக வெளிக்காட்டி வைத்திருக்கப்படும் மேலே இலக்கம் 04 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடமொன்றிலிருந்து அத்தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

08. அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக பூரணப்படுத்தப்பட வேண்டிய விண்ணட்பங்களை தேருநர் இடாப்புக்கள் வெளிகாட்டி வைத்திருக்கப்படும் அனைத்து இடங்களிலிருந்தும் மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களிலிருந்தும் பெற்றுக்கொள்ள முடியுமென்பதுடன் தேர்தல் ஆணைக்குழுவின் www.elections.gov.lk என்ற இணையத்தளத்திலிருந்தும் தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

09. மேலும், தேருநர் இடாப்பில் பதிவுசெய்யப்பட்ட அஞ்சல்மூல வாக்கு விண்ணப்பகாரர்களுக்கு தமது விண்ணப்பங்களை பூரணப்படுத்துவதற்குத் தேவைப்படும தகவல்களை www.elections.gov.lk என்ற தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் சஞ்சரித்து தமது அடையாள அட்டை இலக்கத்தையும் 2019 தேருநர் இடாப்பின் பதிவு மாவட்டத்தையும் உட்படுத்துவதன் மூலமும் அன்றேல், 1919 என்ற அரசாங்க தகவல் மையத்தின் இலக்கத்துடன் தொடர்பை ஏற்படுத்துவதன் மூலமும் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், தங்களின் நிர்வாகத்திற்கு உட்படும் அனைத்து நிறுவனங்களின் அஞ்சல் மூல வாக்காளர்களையும் இது தொடர்பாக அறிவுறுத்தவும்.

10. **ஒரு சீரான நபர்களின் பெயர்கள் காணப்படுவதனால், தமது தகவல்களை மற்றுமொருவரைக் கொண்டு பரீட்சித்து அஞ்சல் மூல வாக்கு விண்ணப்பங்களை பூரணப்படுத்துவதைத் தவிர்க்குமாறு அஞ்சல் மூல வாக்கு விண்ணப்பகாரர்களுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுப்பது மிகவும் உகந்ததாகும்.**

11. அஞ்சல் மூல வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களை நியமிப்பதற்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவம் (பின்னிணைப்பு II) பயன்படுத்தப்படல் வேண்டுமென்பதுடன், குறித்த **அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் நியமனக் கடிதங்களை இராஜகிரிய, சரண மாவத்தையில் அமைந்துள்ள தேர்தல்கள் செயலகத்திற்கு அனுப்பிவைப்பதைத் தவிர்க்குமாறும், உரிய மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருக்கு மட்டும் உடனடியாக அனுப்பிவைக்க வேண்டுமென்பதையும் அறியத் தருகின்றேன். தேர்தல்கள் செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்படும் இவ்வாறான எந்தவொரு நியமனக் கடிதத்தையும் மீண்டும் மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களுக்கு அனுப்பிவைப்பதற்கு தேர்தல்கள் செயலகம் நடவடிக்கை எடுக்காது என்பதை மேலும் அறிவிக்கின்றேன்.** குறித்த ஒரு நிறுவனத்தில் பெரும் எண்ணிக்கையான விண்ணப்பகாரர்கள் இருக்கின்றபோது அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள் சிலரை நியமிப்பதற்கான் தேவை ஏற்படும் என்பதுடன் கடந்த தேர்தல்களின் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் தகவல்களையும் ஆவணங்களையும் பயன்படுத்தி இப்பாராளுமன்றத் தேர்தலுக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள் நியமிக்கப்பட மாட்டார்கள் என்பதை மேலும் அறியத் தருகின்றேன். கடந்த தேர்தல்களின்போது அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களாக கடமைகளிலீடுபட்ட அனுபவம் வாய்ந்த அலுவலர்களுக்கு முன்னுரிமை கிடைக்கின்றவாறு சிரேட்ட பதவிநிலை அலுவலர்களை நியமிப்பது உகந்ததாகும். எவ்வாறாயினும், அஞ்சல் மூல வாக்கு அடையாளமிடல் இரண்டு நாட்களுக்கு மட்டுப்படுத்தப்படுவதனால், அலுவலரொருவருக்கு அத்தாட்சிப்படுத்துவதற்கு உயர்ந்தபட்சம் சுமார் 200-250 அஞ்சல் வாக்குகளை ஒப்படைத்தல் உகந்ததாகும்.

12. அஞ்சல் மூல வாக்களிப்புத் திகதிக்கு முன்னர் அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறவுள்ள, வெளிநாடு செல்லவுள்ள அலுவலர்களை அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களாக நியமிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

13. அஞ்சல் மூல வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கு தம்மால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விண்ணப்பகாரர்களின் ஆவணமொன்றை (பின்னிணைப்பு III) பேணிச்செல்லுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட வேண்டுமென்பதுடன், அஞ்சல் மூல வாக்கு விண்ணப்பங்களை அத்தாட்சிப்படுத்திய பின்னர் அவை அங்கீகரிக்கப்பட்டவை/நிராகரிக்கப்பட்டவை என்பதை அறிவிப்பதும், அங்கீகரிக்கப்பட்ட அஞ்சல் மூல வாக்கு விண்ணப்பகாரர்களுக்கு வாக்குச் சீட்டுக்கள் அடங்கிய பக்கெற்றுக்களை அனுப்புவதற்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் பெயர், பதவி மற்றும் அலுவலக முகவரியை (கட்டாயமாக பதவிவழி இலச்சினை மூலம்) விண்ணப்பப் பத்திரத்தில் பொறிக்குமாறும் அறிவுறுத்தல் வழங்கவும்.

14. சரியான முறையில் பூரணப்படுத்திய அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களிலுள்ள தகவல்கள் சரியானவை என்பதை உறுதிசெய்துகொண்டு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் அத்தாட்சிப்படுத்தியதன் பின்னர் உரிய மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அவை அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அதேபோல், விண்ணப்பகாரர் ஒருவருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்களை சிபார்சு செய்வதையும் போலியான தகவல்கள் அடங்கிய விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதையும் தவிர்க்குமாறு மிகவும் வலியுறுத்தி வேண்டப்படுகிறது. அந்தந்த மாவட்டங்களின் அஞ்சல் மூல வாக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய தெரிவத்தாட்சி அலுவலர்களின் அலுவலக முகவரிகள் அடங்கிய ஓர் ஆவணம் (பின்னிணைப்பு IV) இத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்படுகிறது.

**அஞ்சல் மூல வாக்கு விண்ணப்பங்களைப் பூரணப்படுத்துவதற்கான தகவல்களைப் பெற்றுக்கொள்ளல், அவற்றைச் சமர்ப்பித்தல் மற்றும் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களை நியமித்தல் தொடர்பான விடயங்கள் மாத்திரம் இச்சுற்றறிக்கையில் அடங்கியிருப்பதுடன் அஞ்சல் மூல வாக்கு செயன்முறைக்குத் தேவையான ஏனைய அறிவுறுத்தல்களும் நடவடிக்கைமுறைகளும் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கு எதிர்காலத்தில் நடாத்தப்படும் அறிவுறுத்தல் வழங்கும் கலந்துரையாடல்களின்போது வழங்கப்படும். தெரிவத்தாட்சி அலுவலரினால் நடாத்தப்படும் அறிவுறுத்தல் வகுப்புகளில் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள் கலந்துகொள்வது இன்றியமையாதது என்பதை அவர்களுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்குமாறும் அறிவிக்க விரும்புகின்றேன்.**

**மஹிந்த தேசப்பிரிய,**
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு
(தேர்தல் ஆணைக்குழு சார்பாக)

பிரதிகள்:-

| | | |
|---|---|---|
| 01. அனைத்து தெரிவத்தாட்சி அலுவலர்கள் | } | தகவலுக்கும் மாவட்டத்திலுள்ள அரசாங்க நிறுவனங்களை அறிவுறுத்துவதற்கும் |
| 02. அனைத்து மாவட்ட பிரதி/உதவி தேர்தல்கள் ஆணையாளர்கள் | | |

03. தலைமை அலுவலகத்தின் அனைத்து பதவிநிலை அலுவலர்கள் - தகவலுக்காக.


සභාපති
தவிசாளர்
දූරකථන/தொலைபேசி : 011-2868444
ෆැක්ස්/ தொலைநகல் : 011-2368445
*e-mail : comelesl@sltnet.lk*

ලේකම්
செயலாளர்
දූරකථන/தொலைபேசி : 011-2868406
ෆැක්ස්/தொலைநகல : 011-2868406
*e-mail : admin@elections.gov.lk*

අධ්‍යක්ෂ (පර්යේෂණ හා සැලසුම්)
பணிப்பாளர் (ஆராய்ச்சி மறறும் திட்டமிடல்)
දූරකථන/தொலைபேசி : 011-2877618
ෆැක්ස්/தொலைநகல : 011-2877618
*e-mail : channa@elections.gov.lk*

பின்னிணைப்பு - I

# பாராளுமன்றத் தேர்தல் - 2020

## அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களைப் பூரணப்படுத்துவதற்காக 2019 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு e-சேவையைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பம்

1. அமைச்சு/ திணைக்களம்/நிறுவனம்/ வலயக் கல்வி அலுவலகம்/ பாடசாலை :- ..................................................................................................

2. அலுவலக முகவரி :- ..................................................................................................

..................................................................................................

..................................................................................................

2.1. தொலைபேசி இலக்கம் :- ...................... 2.2. தொலைநகல் இலக்கம் :- .......................

3. அலுவலகம் அமைந்துள்ள மாவட்டம் :- ..............................................................

4. அலுவலகம் அமைந்துள்ள வாக்கெடுப்புப் பிரதேசம் :- ..............................................................

5. மின்னஞ்சல் முகவரி :- ..............................................................

6. நிறுவனத்தின் அஞ்சல் வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் பற்றிய விபரங்கள் (அலுவலர்கள் ஒன்றுக்கு மேற்படுமாயின், தனித்தனியான தகவல் பத்திரங்களைப் பூரணப்படுத்துதல் அவசியமாகும்.)

   (I) பெயர் :- ..............................................................

   (II) பதவி :- ..............................................................

   (III) தேசிய அடையாள அட்டை இலக்கம் :- ..............................................

   (IV) தொலைபேசி இலக்கம்

   அலுவலக :- ..............................................

   கையடக்க :- ..............................................

   தொலைநகல் :- ..............................................

   (V) மின்னஞ்சல் முகவரி :- ..............................................

மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் உண்மையானவை என்பதையும் பெற்றுக்கொள்ளும் தேருநர் இடாப்புத் தகவல்கள் அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களைப் பூரணப்படுத்தும் கருமம் தவிர்ந்த வேறெந்தக் கருமத்திற்கும் பயன்படுத்தப்பட மாட்டாது என்பதையும் (துஷ்பிரயோகம் செய்யப்பட மாட்டாது) அத்தாட்சிப்படுத்தி வெளிப்படுத்துகின்றேன்.

.......................... ..............................................................

திகதி திணைக்கள/தாபனத் தலைவரின் கையொப்பம்

(பெயரும் பதவி முத்திரையும்)

---

### தேர்தல் அலுவலகத்தின் பாவனைக்காக

பணிப்பாளர் (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்)

e-சேவையையும் கடவுச்சொல்லையும் வழங்குவதற்கு அனுமதியளிக்கின்றேன்.

.......................... ..............................................................

திகதி பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்

மாவட்டம்:- ..............................................

பின்னிணைப்பு II

**PE/2020/34/01/F1**
**(மாதிரிப் படிவம்)**

அலுவலக முகவரி : ........................................
........................................
........................................
........................................
திகதி : ........................................

தெரிவத்தாட்சி அலுவலர்,
.................................... தேர்தல் மாவட்டம்

**பாராளுமன்றத் தேர்தல்கள் - 2020**
**அஞ்சல் வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களை நியமித்தல்**

01. (அ) அஞ்சல் வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் பெயர்: ........................................

(ஆ) தேசிய அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | |

02. பதவி : ........................................

03. (அ) அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் அலுவலகம் அமைந்துள்ள மாவட்டம்: ........................................

(ஆ) அலுவலக முகவரி: ........................................

(இ) அலுவலகத் தொலைபேசி இல. : ........................ (ஈ). தொலைநகல் இல.: ........................

(உ) மின்னஞ்சல் முகவரி: ........................................

04. (அ) பிரத்தியேக முகவரி : . ........................................

(ஆ) தொலைபேசி இல. (கையடக்க) : ........................................

05. அலுவலரின் மாதிரிக் கையொப்பம் : ........................................

அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களில் இடப்படுகின்ற பதவி முத்திரையின் மாதிரியை இக்கூண்டினுள் இடவும்.

06. அஞ்சல் வாக்குகள், எந்த நிறுவனத்தின்/ அலுவலகத்தின்/ அஞ்சல் வாக்காளர்கள் தொடர்பில் அத்தாட்சிப்படுத்தப்படுகின்றன: ........................................

07. அஞ்சல் வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் என்ற வகையில் மேற்குறிப்பிட்ட அலுவலர் ஏறத்தாழ எத்தனை அஞ்சல் வாக்குகளுக்கு (எண்ணிக்கை) உரியதாக இக்கடமைகளை ஆற்றுகின்றார்: ........................................

08. தாபனத் தலைவரின் சிபார்சு –

மேற்குறிப்பிட்ட அலுவலரை ........................................ தேர்தலின்போது அஞ்சல் வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலரொருவராக இத்தால் நியமிக்கின்றேன். அவருக்குரிய கடமைகள் தொடர்பாக அவரை அறிவூட்டுவதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இத்தால் அறிவிக்கின்றேன்.

அஞ்சல் வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலரை நியமிக்கும் அலுவலரின் பெயர்: ........................................
........................................

தேசிய அடையாள அட்டை இல: ........................................
பதவி: ........................................
தொலைபேசி இல: அலுவலக: ........................ கையடக்க: ........................
தொலைநகல்: ........................................
மின்னஞ்சல் முகவரி: ........................................

கையொப்பம்: ........................................

பதவி முத்திரை: ........................................

*(இப்படிவத்தில் அனைத்து விபரங்களையும் பூரணப்படுத்த வேண்டும்.)*

பின்னிணைப்பு

# பாராளுமன்றத் தேர்தல் - 2019

## அஞ்சல் வாக்கு விண்ணப்பித்தல் பற்றிய தகவல்கள்

| தொடர் இல. | அஞ்சல் வாக்காளரின் பெயர் | பதவி | அலுவலக முகவரி | அத்தாட்சிப்படுத்தும் அலுவலருக்கு அஞ்சல் வாக்கு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்ட திகதி | அஞ்சல் வாக்கு விண்ணப்பங்கள் உரிய தெரிவத்தாட்சி அலுவலருக்கு அனுப்பிவைக்கப்பட்ட திகதி | அஞ்சல் வாக்காளர் ஒருவராகப் பதிவு செய்துள்ள நிருவாக மாவட்டம் | அஞ்சல் வாக்காளரைப் பதிவுசெய்வதற்குரிய விபரங்கள் | | | | தெரிவத்தாட்சி அலுவலரினால் விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன / நிராகரிக்கப்பட்டுள்ளன என்பது அறிவிக்கப்பட்டிருப்பின் அத்தீர்மானக் கடிதத்தின் விபரங்கள் | அஞ் வாக்குச் அடங் காப்பு உ கிடைக்க திக |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | தேர்தல் மாவட்டம் | வாக்கெடுப்புப் பிரிவு | வாக்கெடுப்பு மாவட்டம் | தொடரிலக்கம் | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |

பின்னிணைப்பு IV

## அஞ்சல் வாக்கு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகங்கள்

| | முகவரி | | தொலைபேசி இலக்கம் | | மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தின் தொலைநகல் இலக்கம் |
|---|---|---|---|---|---|
| | | | மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | |
| 01 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | ‘நில மெதுர’, நாராஹேன்பிட்ட, கொழும்பு 05 | 011-23691348 | 011-2369437<br>011-2369438<br>(மாவட்ட) | 011-2369279<br>011-2369481<br>(மாவட்ட) |
| 02 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | கம்பஹா | 033-2222841 | 033-2222047 | 033-2223462 |
| 03 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | களுத்துறை | 034-2222235 | 034-2222066 | 034-2222247 |
| 04 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | கண்டி | 081-2222233/35 | 081-2233187 | 081-2233190 |
| 05 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | மாத்தளை | 066-2222236 | 066-2222422 | 066-2230401 |
| 06 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | நுவரெலியா | 052-2222235 | 052-2222325 | 052-2222066 |
| 07 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | காலி | 091-2234235 | 091-2234028 | 091-2234018 |
| 08 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | மாத்தறை | 041-2222235 | 041-2222305 | 041-2244645 |
| 09 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | அம்பாந்தோட்டை | 047-2256235 | 047-2256248 | 047-2256495 |
| 10 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | யாழ்ப்பாணம் | 021-2222235 | 021-2222640 | 021-2228002 |
| 11 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | கிளிநொச்சி | 021-2283965 | 021-2285664 | 021-2283819 |
| 12 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | வவுனியா | 024-2222235 | 024-2222311 | 024-2228911 |
| 13 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | மன்னார் | 023-2222235 | 023-2222289 | 023-2223710 |
| 14 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | முல்லைத்தீவு | 021-2290035 | 021-2061426 | 021-2061427 |
| 15 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | மட்டக்களப்பு | 065-2224435 | 065-2224312 | 065-2224374 |
| 16 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | அம்பாறை | 063-2222206 | 063-2224342 | 063-2224342 |
| 17 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | திருகோணமலை | 026-2222235 | 026-2222304 | 026-2224975 |
| 18 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | குருணாகல் | 037-2222235 | 037-2222369 | 037-2221549 |
| 19 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | புத்தளம் | 032-2265235 | 032-2265246 | 032-2265302 |
| 20 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | அநுராதபுரம் | 025-2235479 | 025-2222551 | 0252226440 |
| 21 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | பொலனறுவை | 027-2222235 | 027-2222012 | 027-2057320 |
| 22 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | பதுளை | 055-2222235 | 055-2222424 | 055-2225222 |
| 23 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | மொணராகலை | 055-2276235 | 055-2276315 | 055-2276291 |
| 24 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | இரத்தினபுரி | 045-2222235 | 045-2222023 | 045-2221905 |
| 25 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | கேகாலை | 035-2222235 | 035-2222561 | 035-2232003 |